பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி
Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி 08 | சனிக்கிழமை | (25.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 310

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk



## உலகில் இசையை ரசிப்பதில் யாழ்.மக்கள் முதன்மையானவர்கள்

### வலம்புரிக்கு வருகைதந்த வயலின் மேதை குன்னக்குடிவைத்தியநாதன் உரை

(யாழ்ப்பாணம்)

உலகில் இசையை ரசிப்பதில் யாழ்ப்பாணத்து மக்கள் முதன்மையானவர்கள்.இவ்வாறு தமிழகத்திலிருந்து இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இசைமாமேதை டாக்டர் குன்னக்குடி வைத்தியநாதன் புகழாரம் சூட்டினார்.

தேசிய தீபாவளி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த தென்னிந்திய பேரூர் மகாசந்நிதான முதல்வர் அருட்திரு மருதாச்சலம் அடிகள் மற்றும் உலகப் புகழ்பெறற வயலின் இசைமேதை குன்னக்குடி வைத்தியநாதன் ஆகியோர் நேற்றுப்பிற்பகல் 4மணிக்கு வலம்புரி-சங்குநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கு வருகை தந்தனர்.

(08 பக்கம் பார்க்க)

# புலிகளின் தடையை நீக்குமாறு அமெரிக்க நாட்டு அரசுக்கு நோர்வே பரிந்துரையாது

## தூதுவர் எரிக்சோல் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

**சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து வ'டுதலைப் புலிகள் அமைப்பை நீக்குவதற்கு நோர்வே அரசு அமொ'க்காவுக்குப் பரிந்துரை செய்யமாட்டாதென நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கா தனது பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் மீண்டும் சேர்த்திருப்பதையடுத்து விடுதலைப் புலிகளின் அதிருப்தியை சு.ப.தமிழ்ச்செல்வன் அண்மையில் ஒஸ்லோவில் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மிடம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்குவதற்கு நோர்வே அமெரிக்காவிற்குப் பரிந்துரை செய்யுமென செய்தி ஊடகமொன்று தகவல் வெளியிட்டிருந்தது.

(08 பக்கம் பார்க்க)

## மாட்டு வண்டி கடத்தப்பட்டமைக்கும் புலிகளுக்கும் தொடர்பு இல்லை!

### திருமலைப் பொறுப்பாளர் திலக்

(கிளிநொச்சி)

திருகோணமலை கிண்ணியாவில் முஸ்லிம்களின் மாட்டு வண்டி கடத்தப்பட்டமைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட மாட்டு வண்டில் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டிருந்தது. இது விடுதலைப்புலிகளாலேயே கடத்தப்பட்டதாக சில விசமிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச் சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளை தடம்புரளச் செய்யும் நோக்குடனேயே இவ்வாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன எனத் திலக் தெரிவித்துள்ளார்.

(இ-5)

## இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் சமாதான முயற்சியை பாதிக்கும்

### தமிழ்க் ஹார்டியன் தெரிவிப்பு

(லண்டன்)

சிங்களப் பேரினவாதிகளின் மேலாதிகத்தை விடுதலைப் புலிகள் மீதும். தமிழ் மக்கள் மீதும் பலாத்காரமாகப் பிரயோகிப்பதற்கு இலங்கை அரசு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக தமிழ் கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டனில் இருந்து வெளிவரும் இப்பத்திரிகையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது யுத்த அச்சுறுத்தல் ஒன்றை திணிப்பதற்கு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா முன்வந்துள்ளார்.இந்த ஒப்பந்தமானது இலங்கையின் சமாதான முயற்சிகளை ஆரோக்கியமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குச் சாதகமாக அமையாது என்று அப் பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கெதிராக முன்னெச்சரிக்கையாக இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.(ம)

## எழுச்சியுடன் நடந்த தீபாவளித்திருநாள்

## குன்னக்குடியின் வயலின் இசைக்கு நல்லூரில் மக்கள் கூட்டம் திரண்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தேசிய தீபாவளி திருநாள் நேற்று வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தென்னிந்திய பேரூர் ஆதீன முதல்வர் மருதாச்சலம் அடிகள், நல்லை ஆதீன குருசந்நிதான முதல்வர், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம்

(08 பக்கம் பார்க்க)



## அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் மாபெரும்பேரணி

### ஸ்ரீ.சு.கட்சி ஏற்பாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் தலைநகர் கொழும்பில் நேற்று இடம்பெற்ற அரச எதிர்ப்பு மக்கள் பேரணியில் லட்சக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றையதினம் தீபாவளிப் பண்டிகையாக இருந்தமையினால் இப்பேரணியை நடத்த வேண்டாம் என அரசியல் தலைவர்கள் மற்றும் இந்து சமய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருந்த போதும் அதனையும் பொருட்படுத்தாது இபபேரணி நடத்தப்பட்டது. கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கு சந்தி, பம்பலப்பிட்டி ஹென்றி பேதிலிஸ் மைதானம், கோட்டே சந்திரா டி சில்வா மைதானம், பொரளை கைம்பலி மைதானம், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகிய ஐந்து இடங்களில் இருந்து ஆரம்ப

(08 பக்கம் பார்க்க)

# செய்தித் துளிகள்

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

தொழில் திணைக்களத்தின் மனிதவள மேம்பாட்டுப் பிரிவினால் பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில், எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விபயிலும் க.பொ.த(சா/த) மற்றும் (உ/த) மாணவர்கள் 400 பேருக்கு தொழில்திணைக்கள உத்தியோகத்தர் லீ. ஆனந்தநடராசா தலைமையில் இவ்வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

அத்துடன், தொழில் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளால் எதிர்வரும் 28ஆம் திகதி காலை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இது போன்ற கருத்தரங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-43)

## ஆரம்ப சுகாதார ஆய்வுப் பட்டறை

(கந்தர்மடம்)

தமிழீழ சுகாதார சேவைகள் அரச சுகாதாரத் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றால் வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார சேவைகள் தொடர்பான ஆய்வுப் பட்டறை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடனும் தமிழீழ சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலுடனும் அண்மையில் முல்லைத் தீவு மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜெயக்குலராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெவ், உலக சுகாதார நிறுவனம், அம்டா வேல்ட் விசன், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம், ஒக்ஸ்பாம், போரூட், தீலீபன் மருத்துவமனை, வவுனியா மாவட்ட சுகாதார திணைக்களம் மற்றும் அரசசார் பற்ற வெளிநாட்டு உளளூர் நிறுவனப் பிரதிநிதிகள், அரச சுகாதார சேவைகளின் தமிழீழ சுகாதார வெளிகள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-43,85)

## கலாசார விழிப்புணர்வு சுவரொட்டி

(கந்தரோடை)

கந்தரோடை மற்றும் சுன்னாகம் பகுதிகளில் கலாசாரத்தைப் பேணக் கோரி பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

மேற்படி பகுதிகளில் தற்போது கசிப்பு உற்பத்தி அதிகரித்தள்ளதுடன் பாவனையாளர்களின் தொகையும் அதிகரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஒட்டப்பட்டுள்ள மேற்படி சுவரொட்டிகளில் பொதுமக்களை கலாசாரத்தை பேணக்கோரியும், அவ்வாறு இல்லாது கலாசாரத்தை சீரழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-103)

## குடி நீர்த் தாங்கிகள்

(சுதுமலை)

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் குடிநீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் இப்பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான குடி நீர்கிடைக்கவுள்ளது.

இதேவேளை, மின்சார வசதி அற்ற பாடசாலைகளுக்கு மின் பிறப்பாக்கிகளையும் யுனிசெவ் நிறுவனம் வழங்கி வருகின்றது.

இந் நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திச்சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் ஆகியன ஒத்து ழைப்பு வழங்கி வருகின்றன. (உ-252)

## களவுபோன தாலிக்கொடி மீட்கப்பட்டது

(தனங்கிளப்பு)

கிளிநொச்சி வட்டக்கச்சியை நோக்கிப் பயணம் செய்த பெண் ஒருவரின் பதின்மூன்றரைப் பவுண் தாலிக்கொடியினை வட்டக்கச்சி பிரதேச தழிழீழக் காவல் துறையினர் மீட்டனர்.

வெளிநாட்டில் இருந்து வட்டக் கச்சியில் உள்ள உறவினரைப் பார்ப்பதற்கு வந்த பிரஸ்தாபப் பெண் வானில் பயணித்த வேளை இவரது தாலிக்கொடிகளவாடப் பட்டது.

இது பற்றி வட்டக்கச்சி காவல் துறைக்கு முறையிட்டதையடுத்து, விசாரணையின் போது பத்து வயதுச் சிறுமியொருவர் கொடுத்த தகவலை அடுத்து கல்மடுவை சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்து விசாரித்தனர்.

அதன் பேரில் தாலிக்கொடி மீட்கப பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டது. தாலிக் கொடியை திருடிய நபர் தொடர்பான விசாரணைக்கு உதவிய சிறுமிக்கு இரண்டு பவுண் சங்கிலி மேற்படி பெண்ணால் வழங்கப் பட்டதாக அறியப்படுகின்றது. (தி-37)

## குறைந்த வட்டியில் பஸ் வண்டிகள்

இந்திய கடன் திட்டத்திற்கு அமைய குறைந்த வட்டியில் பஸ் வண்டிகளை கொள்வனவு செய்யும் வாய்ப்புக்களைத் தனியார் துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதன் மூலம் 9 சதவீத வட்டியில் வாகனங்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் இதற்கான அனு மதியை திறைசேரி வழங்கியிருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தனியார் வங்கிகளூடாகவே இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளதாகத் தனியார் பஸ் வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார். (உ-60,10)

## சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் அரச பணியாளர்களுக்கான சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக் கருத்தரங்கில், சட்ட நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துரைகளை முன்வைக்கவுள்ளனர். (உ-4)

## ச.ச. நிலையம் புனரமைப்பு

(வடலியடைப்பு)

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து இதுவரை காலமும் செயற்படாமல் இருந்து வந்த நாவற்குழி சந்தியிலுள்ள சனசமூக நிலையத்தினைப் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

மேற்படி சனசமூக நிலையத்திற்கு நிர்வாக சபையொன்றும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-21)

## தீப்பற்றியதில் மூவர் படுகாயம்

(திருநெல்வேலி)

பெற்றோல் போத்தலினுள் இருந்த மண்ணெண்ணெயை எரிந்து கொண்டிருந்த விளக்கினுள் விட்டசமயம் விளக்குத் தீப்பற்றியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த எரிகாயங்களுக்கு ஆளாகினர்.

கடந்த திங்களன்று தாளையடியில் உள்ள அழியவளையில் இடம பெற்ற இந்தச் சம்பவத்தில் பரமேஸ்வரன் பத்மினி (வயது 32) அவரது பிள்ளைகளான ப.பிரதீபா (வயது 8), ப.லதீபா(வயது 3) ஆகியோரே எரிகாயங்களுக்கு ஆளான நிலையில கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-43,35)

## சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகம் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலிலுள்ள நாவலர் மணி மண்டபத்தில் கந்தசஷ்டி விரதத்தையொட்டி நாளை முதல் 31ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 4.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தலைமையில் சிறப்பு நிகழ்வுகளை நடாத்தவுள்ளது. (உ-18)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் ஐப்பசிமாத வெள்ளி தோறும் காலை 6.00 மணிக்கு திருவாசக முற றோதல் ஆரம்பமாகி மதியம் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (உ)

## வாண்மை விருத்திச் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயற்றிட்டம் இடம்பெற்றுவருகின்றது.

வார இறுதி நாட்களில் இடம் பெறும் இச்செயற்றிட்டம் 15 அமர்வுகளாக இடம்பெறவுள்ளது. (உ-7)

## மஹோற்சவம்

(குப்பிளான்)

அனலைதீவு தெற்கு சங்காதி கலட்டி ஸ்ரீ சங்கரநாதர் முருக மூர்த்தி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 2,3,4 ஆம் திகதிகளில் முறையே ஆலய சப்பர, தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (உ-20)

## மெய்கண்ட தேவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் வண்.நாவலர் மகாவித்தியாலயத்துடன் இணைந்து நடாத்தும் சந்தான குரவர் மெய்கண்டதேவர் குருபூசை விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சைவப்புலவர் செல்வி அருளம்பலம் மீனலோசினி, சைவப்புலவர் கா.கமலநாதன் ஆகியோர் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றவுள்ளனர். (உ-8)

## விளையாட்டு வினையானது

(மருதங்கேணி)

விளையாட்டு விபரீதமானதில் வவுனியாவில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

சிறுவர்களான தமையனும் தம்பியும் விளையாடிக்கொண்டிருக்கையில், தமையனின் கழுத்தில் தம்பி கயிற்றைப் போட்டு விளையாட்டாக இறுக்கியதில் அச்சிறுவன் மூச்சுத்திணறி ஸ்தலத்திலேயே இறந்துள்ளான்.

வவுனியாவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் திருநாவற்குளத்தைச் சேர்ந்த வசந்தகுமார் கிரிசாந்தன் (வயது -12) எனும் சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்தவனாவான். (உ-35)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோவிலின் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு யா/ வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (உ-8)


## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய பாவிக்காத L.G சலவை இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு நடராஜா 73/1, கலட்டி அம்மன் தெரு, வண்ணார் பண்ணை, வடகிழக்கு யாழ்ப்பாணம். தொலைபேசி: 021- 222 5488

(7726)

### O/L கணிதம்

A,B பெறுபேறு அடைவ தற்காக ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக் கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புக்களும் 20 நாட்க ளில் தொடர் 40 மணித்தியா லங்களில் நிறைவேற்றப்படும்.
க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி

(7724)


# நிரந்தர அரசியல் தீர்வை பொ.ஐ.மு. வலியுறுத்துகிறது

## சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றைச் செய்யவுள்ளதை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம். இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் எமது நிலைப்பாட்டையே இந்தியாவும் கொண்டுள்ளது.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வும், வட- கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை குறித்தவிடயமும் ஒன்றோடொன்று இணைந்தவையாக இருக்க வேண்டுமென ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியும் தொடர்ந்து கடந்த ஒன்றரை வருடங்களாக வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இன்னும் அதன் நிலைப்பாட்டைத் தெரிவிக்காததால் அரசாங்கம் தற்போது தமது நிலைப் பாட்டைத் தெளிவுபடுத்தவேண்டும் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இடைக்கால சபை குறித்து ஆராய்து வரும் அதேவேளை நிரந்தர அரசியல் தீர்வு குறித்தும் நாம் வலியுறுத்தி வருகிறோம். எமது நிலைப்பாடுகளை வெளி நாடுகள் பல ஏற்றுக் கொண்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-18)





இலங்கை கணனி உற்பத்தி விற்பனை செய்யும் நிறுவனங்களின் ஏற்பாட்டில் மத்திய கல்லூரியில் இடமபெற்று வரும் கணனிக் கண்காட்சி ஆரம்ப வைபவத்தில் எடுக்கப்பட்டபடங்கள்
(படங்கள், ஜெ .ஜெராட்)

### தலைமறைவாக வெளிநாட்டில் வாழ்ந்து வரும்

# பிரமுக வங்கியின் ஸ்தாபகர் நாடு திரும்ப விரும்புகிறார்

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள பிரமுக வங்கியின் ஸ்தாபகரும் தற்போது ஐரோப்பிய நாடொன்றில் தலைமறைவாக இருந்து வருபவருமான றோகான் பெரேரா, டெயிலிமிரர் ஆங்கிலப்பத்திரிகையுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டுள்ளார்.

போலிக்குற்றச்சாட்டுக்களின் பேரில் தான் விளக்கமறியலில் வைக்கப்படமாட்டார் என்று உறுதியளிப்பின் மீண்டும் இலங்கை வரவிரும்புவதாகவும் ஆனால், தான் எந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அவர் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இதன் போது, தான் வங்கியின் வாடிக்கையாளர் பற்றிய அனைத்து தகவல்களையும் வைத்திருப்பதாகவும் இங்கு வந்து எத்தகைய நடவடிகைக்கும் முகம் கொடுக்கத் தயார் என்றும் வங்கியை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில தான் சுதந்திரமாக ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.


இதேவேளை, இது குறித்து கருத்து தெரிவித்த பிரமுக வங்கியின் முகாமையாளர் ஏ.எச். மென்டிஸ்,

நாம் பெரேரா இலங்கைக்கு விரைவில் திரும்ப வேண்டும் என்பதையே விரும்புகிறோம் அவர் திடீரென்று நாட்டை விட்டு வெளியேறியது ஏன் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவர் மீண்டும் இங்கு வந்து தற்போதைய சிக்கலை தளர்த்துவது அவசியம்.மத்திய வங்கியில் உள்ள பலரைவிட அவருக்கு வங்கி பற்றிய சட்டதிட்டங்கள் நன்றாகவே தெரியும் என்றார்.

பிரமுக வங்கியை மீண்டும் உயிர்ப்பிகக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் கே.சி. விக்னராஜாவும் பெரேரா நாட்டிற்கு திரும்புவதை வரவேற்றுள்ளார் (உ-6)

## வீரவன்சவும்~ ஐ.நா. உரையும்




# வறுமை ஒழிப்புத் தொடர்பான நிலைப்பாட்டிற்கு ஐ.நா. வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையில் 2015 ஆம் ஆண்டளவில் வறுமையால் வாடுவோரின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதென்ற அரசாங்கத்தின் இலக்கை இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் நிக்கல் போமியோ வரவேற்றுள்ளதுடன் அதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவி கிடைக்கும் எனவும் உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிககப்பட்டு 58 வருடங்கள் நிறைவு பெறுவதை நினைவு கூரும் முகமாக அண்மையில் இலங்கை அலுவலகத்தில் நடைபெற்ற கொடியேற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐக்கிய நாடுகள் சபை, இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளுக்குத் தேவையான பங்களிப்பை வழங்க விருபபதுடன், கடுமையான வறுமை ஒழிப்பு நடவடிக்கைக்கும் உதவவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்நிகழ்வில் பிரதமஅதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய மின்சக்தி எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரிய, உலகத்தின்ஒழுங்கை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பங்கு அத்தியாவசியமானது என இலங்கை தொடர்ந்து நம்புகிறது.

சகலருக்கும் கூடுதல் பாதுகாப்பை வழங்கி அபிவிருத்தியை முழுமையாக்கும் வழிவகைகளில் பலதரப்பு அணுகு முறைகளை கடைப்பிடிப்பதன் அவசியத்தை நாம் மீள வலியுறுத்துகின்றோம் எனத்தெரிவித்தார். (உ-60,10)

## காவலூர்க் கோட்ட பாடசாலைகள் பண்ணிசைப்போட்டி முடிவுகள்

(குப்பிளான்)

ஊர்காவற்றுறை கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே கடந்த 18ஆம்திகதி நடத்தப்பட்ட பண்ணிசைப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

### பாலர் பிரிவு

ஞா.கலைச்செல்வி-யாழ்ற்ரன் கல்லூரி.
தி. செந்தூரன்- யாழ்ற்ரன் கல்லூரி.
நே. ஆர்த்தி-காரைநகர் மெய்கண்டான் வித்தி.

### ஆரம்பப்பரிவு

செ.கேதினி-கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தி
சா.பிருந்தா-காரைநகர் மெய்கண்டான் வித்தி.
நா.ஜதீஸ்வரி- வியாவில் சைவ வித்தி.

### கீழ்ப்பிரிவு

க. கோகிலா-யாழ்ற்ரன் கல்லூரி
இ. சிந்துஜா- நாரந்தனை றோ.க. வித்தி.
க. விஜி-கலாநிதி தியாகராஜா ம.ம. வித்தி.

### மத்திய பிரிவு

செ.யாழினி-யாழ்ற்ரன் கல்லூரி
ஜோ. ஜொனிஜான்சன்- புனித அந்தோனியார் கல்லூரி
சி.ஸ்ரீதரன்-புனித அந்தோனியார் கல்லூரி.

### மேற்பிரிவு

ம.தர்சன், ச.குகதர்சினி-புனித அந்தோனியார் கல்லூரி.
இ.சிவதர்சினி, வ.மஞ்சுளா-யாழ்ற்ரன் கல்லூரி.
க. கஜந்தினி,சா.சரிதா-கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தி.

### அதிமேற்பிரிவு

க.காந்தரூபி, க.நிஷாந்தி-கலாநிதி தியாகராஜா ம.ம.வித்தி.
பெலிக்ஸ் அல்பேட் வேர்சினி, தெ.துஸ்யந்தி- புனித அந்தோனியார் கல்லூரி. (பி-20)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித்தொடரில் பெனற ரத்நாயக்கவின் நெறியாள்கையில் உருவான ''அஸ் வசும்'' (ஈடு செய்தல்) என்னும் சிங்களத்திரைப் படம், ஆங்கில உப தலைப்புக்களுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உடுவில்,தெல்லிப்பழை,சங்கானை ஆகிய பிரதேசங்களில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 1,2ஆம்திகதிகளில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (உ-7)

## தமிழ்-சிங்கள கலைஞர்கள் கலைக்கூடல்

(யாழ்ப்பாணம்)

''ஹிறு''குழுவினரின் ஏற்பாட்டில் சிங்கள-தமிழ் கலைஞர்களின் கலைக்கூடல் நிகழ்வு எதிர்வரும் 29,30 ஆம்திகதிகளில் கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழ் சிங்களக் கலைஞர்கள் பலரும் பங்கேற்று பல்வேறு கலை நிகழ்வுகள் கருத்தாடல்கள் என்பவற்றை ஆற்றுகை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-18)

## ''வித்தியா''சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் '' வித்தியா'' சஞ்சிகை வெளியீடும் ஒலி,ஒளி கலையகத்திறப்பு விழா மற்றும் நூலக வார விழாவும் எதிர்வரும் 27ஆம்திகதி திங்கட்கிழமை பி.ப.3.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ. சிவஞானசுந்தரம் சிறப்புவிருந்தினராகவும், வலி - கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ். யாழவன் கௌரவவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-18)

# சங்கானைக் கல்விக் கோட்ட...

### பண்ணிசை

### (தரம்-01 ஆண்)

யா.ஆதித்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி.
ப.சாயிந்தன் - வட்டு. திருநாவுக்கரசு வித்தி.
க.மயூரன் - வட்டு. மத்திய கல்லூரி.

### (பெண்)

எஸ். எழிலரசு - யாழ்ப்பாணக் கல்லூரி.
சு.மீரா - அராலி சரஸ்வதி மகா வித்தி.
சி.சாமினி - தொல்புரம் அ.மி.த.க.

### (தரம்-02 ஆண்)

ந.சிவப்பிரியன் - சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தி.
நா. விமல்ராஜ் - அராலி சரஸ்வதி மகா வித்தி.
சி.சுகந்தன் - சுழிபுரம் ஐக்கிய சங்கம்.

### (பெண்)

நா.சங்கவி - அராலி சரஸ்வதி மகா வித்தி.
ப.தர்சிகா - மூளாய் சைவப்பிரகாச வித்தி.
கி.டிலாஜினி - அராலி இந்துக் கல்லூரி.

### (தரம்-03 ஆண்)

செ.அனோஜன் - சங்கானை சிவப்பிரகாச வித்தி.
ம.உமாராஜ் - அராலி சரஸ்வதி மகா வித்தி.
அ.பார்த்தன் - வட்டு. கார்த்திகேயா வித்தி.

### (பெண்)

து.ஜமனாமலர் - யாழ்ப்பாணக் கல்லூரி.
ஜெ.தர்சனா - அராலி சரஸ்வதி மகா வித்தி.
ப. விஜிதா - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

### (தரம்-04 ஆண்)

ஞா.கபிலன் - அராலி சரஸ்வதி மகா வித்தி.
வி.குகராஜன் - வட்டு. கார்த்திகேயா வித்தி.
சி.குமரேஸ் - பண்ணாகம் மெய்கண்டான்.

### (பெண்)

ம.தனுசியா - அராலி சரஸ்வதி மகா வித்தி.
ச.குகதர்சி - பொன்னாலை வரதராஜா.
வி.வைஷ்ணவி - யாழ்ப்பாணக் கல்லூரி.

### (தரம்-05 ஆண்)

க.பிரதீபன் - வட்டு. மத்திய கல்லூரி.
ச.சண்மதுரன் - சுழிபுரம் ஐக்கிய சங்கம்.
ச.ரவிகரன் - சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.

### (பெண்)

த.கஜனி - யாழ்ப்பாணக் கல்லூரி.
இ.மேரியா - தொல்புரம் விக்னேஸ்வரா.
செ.கார்த்திகா - வட்டு. மத்திய கல்லூரி.

### (தரம்-06 ஆண்)

ச.கஜன் - வட்டு. மத்திய கல்லூரி.
க.சதீஸ்வரன் - வட்டு. இந்துக் கல்லூரி.
கு.சிசாந்தன் - சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.

### (பெண்)

செ.சசிகலா - சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.
சி.ரிசாயினி - வட்டு. மத்திய கல்லூரி.
ந.துஸாந்தி - சங்கானை சிவப்பிரகாச வித்தி.

### (தரம்-07 ஆண்)

ச.சிவரமணன் - சங்கானை சிவப்பிரகாச வித்தி.
வை.பிரதீபன் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
ச.கிருஷ்ணகுமார் - பிளவத்தை அ.மி.த.க.

### (பெண்)

ஞா.கிருத்திகா - மூளாய் சைவப்பிரகாச வித்தி.
ந.நிரோஜினி - வட்டு. இந்துக் கல்லூரி.
ச.பிருந்தா - சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.

### (தரம்-08 ஆண்)

ப.ஜெசிதரன் - மூளாய் சைவப்பிரகாச வித்தி.
த.நிறோஜன் - சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.
ந.கபிலன் - சங்கானை சிவப்பிரகாச வித்தி.

### (பெண்)

க.தனுப்பிரியா - அராலி சரஸ்வதி மகா வித்தி.
சி.ஜென்சி - மூளாய் சைவப்பிரகாச வித்தி.
க.லாவண்யா - யாழ்ப்பாணக் கல்லூரி.

### (தரம்-09 ஆண்)

ம.சாரங்கன் - யாழ்ப்பாணக் கல்லூரி.
ப.சங்கரன் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
தி.ரகுபரன் - சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

### (பெண்)

க.சத்யா - யாழ்ப்பாணக் கல்லூரி.
செ.சுகப்பிரதா - அராலி சரஸ்வதி மகா வித்தி.
கு.சொருபீகா - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

### (தரம்-10 ஆண்)

ர.ரகுராம் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
ரி.பிரேமானந்தா - வட்டு. இந்துக் கல்லூரி.
ச.செல்வரூபன் - அராலி சரஸ்வதி மகா வித்தி.

### (பெண்)

சு.தேவிகா - வட்டு. இந்துக் கல்லூரி.
சௌ.சஜிதா - சங்கானை சிவப்பிரகாச வித்தி.
சி.வயூரி - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

### (தரம்-11 ஆண்)

க.சிவந்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி.
ப.கஜந்தன் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
அ.சரவணபவன் - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

### (பெண்)

க.தாரணி - அராலி சரஸ்வதி மகா வித்தி.
வெ.சுபஹரி - யாழ்ப்பாணக் கல்லூரி.
வை.ரஞ்சினி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

### (தரம்-12 ஆண்)

ம.திருவூரங்கன் - யாழ்ப்பாணக் கல்லூரி.
அ.திவ்ராஜ் - சங்கானை சிவப்பிரகாச வித்தி.
க.ரகுசங்கர் - வட்டு. இந்துக் கல்லூரி.

### (பெண்)

ர.யாழினி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
தெ.ஈஸ்வரி - யாழ்ப்பாணக் கல்லூரி.
இ.தவச்செல்வி - வட்டு. மத்திய கல்லூரி.

**(ஏனைய போட்டி முடிவுகள் நாளை வெளிவரும்.)**

## இன்று ஒரு தகவல்

# கருப்பை !

நாம் இந்த உலகிற்கு வந்து சேருவதற்கு முன்பு ஓர் இடத்தில் சிறிது நாட்கள் தங்கியிருந்தோம். அந்த இடம் நினைவிருக்கிறதா உங்களுக்கு? அது தான் கருப்பை! 10 மாதங்கள் அங்கு இருந்து விட்டுத்தான் வந்திருக்கின்றோம். இருந்தாலும் அங்கு என்ன நடக்கின்றது என்பது பற்றி யாருக்காவது நினைவிருக்கின்றதா? நிச்சயமாக இருக்காது!

கருப்பையில் என்ன நடக்கின்றது என்பது பற்றி இது நாள்வரை யூகத்தின் அடிப்படையில் தான் கூறிக்கொண்டிருந்தார்கள். இப்போது கேளா ஒலி வரைபுகள் மூலம் அங்கு நடக்கும் அனைத்தையும் விபரமாகப் புரிந்து கொள்ள முடியும்.

கருப்பைக்குள் இருக்கும் குழந்தை கொட்டாவி விடுமாம். விரல்களை சூப்புகின்றதாம். சோம்பல் முறிக்கின்றதாம். கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்கின்றதாம். இவ்வளவையும் ஒரு தொலைக் காட்சியில் பார்க்கமுடியுமாம். அந்த அளவு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்து விட்டது.

கருப்பைக்குள் ஒரு திரவத்தின் மீது சிசு மிதந்து கொண்டிருக்கின்றது. கண்ணை விழித்ததும் கொட்டாவி விட்டுக்கொண்டு கைகால்களை உதைத்துக்கொள்கின்றது. கையின் கட்டை விரலை வாயில் வைத்துக் கொள்கிறது. தாயின் இதயத்துடிப்பு , செரினாமப் பாதையில் ஏற்படும் சத்தங்கள் இவையொல்லவற்றையும் கேட்டுக்கொண்டிருக்கின்றபோது தாயின் குரல் கேட்பதை உணர்ந்து கவனிக்கின்றது.

தாய் எழுந்து நடக்கும் போது கருப்பை நீரின் மெல்லிய அசைவில் மெய்மறந்து தூங்கிவிடும். கருப்பையில் குழந்தை மிகவும் அமைதியாக இருக்கும் என்று நினைத்துவிடாதீர்கள். ஒரு ஒலிப்பதிவுக் கருவி மூலமாக அங்குள்ள சத்தங்களைப்பதிவு செய்து பார்த்திருக்கின்றார்கள். தாயின் இதயத்துடிப்பு அங்கு டம் டம் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றதாம். தாய் மூச்சு விடுவது புஸ் புஸ் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றதாம். வயிற்றினுள் இருந்தும் குடலினுள் இருந்தும் வரும் பலவிதமான ஒலிகள் தவிர வெளி உலக ஒலிகளும் கேட்கின்றதாம்.

அதனால் தான் கருவுற்றதாய்மார்கள் இருக்கும் அறையில் தொலைக்காட்சி, வானொலிகளை நல்ல சத்தத்தில் வைக்கக்கூடாது என்று கூறுவார்கள். சத்தம் போட்டுப் பேசுவதும் தவறு. சண்டை செய்வதும் தவறு. சத்தம் நிறைந்த இடயங்களில் அவர்கள் இருக்கக் கூடாது. கருப்பைக்குள் இருக்கும் சிசு சும்மா இருப்பதில்லை.வெளி உலகிற்கு வந்த பின் எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலைகளுக்கு கருவின் உள்ளேயே தன்னைத் தயார் செய்து கொள்கிறது. கருப்பைக்குள் உள்ள குழந்தை மூச்சு விடுவதில்லை. இருந்தாலும் அதன் உதரவிதானம் மூச்சு விடுவது மாதிரி அசைந்து கொண்டேயிருக்கும். அங்கு எதையும் சாப்பிட வேண்டிய தேவை அதற்கு இல்லை. இருந்தாலும் கருப்பையில் உள்ள நீரைக்குடிக்கின்றது. அப்படி குடிக்கும் போது சில வேளைகளில் விக்கல் கூட ஏற்படும். அந்தச் சமயம் தாயாருக்கு தவளை வயிற்றில் குதிப்பது போல் இருக்குமாம். சாதாரணமாக உள்ளே இருக்கும் குழந்தைக்குப் பசியோ தாகமோ ஏற்படாது. ஆனாலும் தாயார் உண்ணும் உணவில் சத்துப்பற்றாக்குறை இருந்தால் குழந்தைக்கும் சத்துக்குறைபாடு ஏற்படும்.

ஒரு குழந்தை கருவில் இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட தாலாட்டுப் பாடலைப் பாடிக்கொண்டிருந்தால் அது அந்தப்பாட்டுக்கு ஏற்றபடி கை, கால்களை குறிபபிட்ட வகையில் ஆட்டுவதற்குக் கற்றுக் கொள்ளுமாம். குழந்தை பிறந்த பின் அதே பாட்டைப் பாடி அழுகின்ற குழந்தையை அமைதிப்படலாம்.

இதுவரை கூறியதெல்லாம் மருந்துவர்கள் கூறியது. இப்போது கூறுவது சாதாரணமாக நாம் கூறுவது.

அதாவது தாலாட்டு யார் பாடுவது?குழந்தை வயிற்றில் இருக்கும் போது தாயார் தாலாட்டுப்பாடுவது நல்லது. அப்போது தான் அது சுகமாக காலாட்டும். அப்பாக்கள் பாடினால் என்ன ஆகும் தெரியுமா? வயிற்றினுள் இருக்கும்போதே குழந்தை ஒரு தீர்மானத்திற்கு வந்து விடும். வெளியே வந்த பின் காலாட்டுவதற்குப் பதில் உதைக்க ஆரம்பித்து விடும்.

தொட்டிலில் படுத்திருந்த ஒரு குழந்தை அழத் தொடங்கியது. அதன் தந்தை தொட்டிலை ஆட்டத் தொடங்கினார். சிறிது நேரத்தில் கடைக்குச் சென்றிருந்த தாய் திரும்பி வந்தார் ''ஏன் சும்மா தொட்டிலை ஆட்டுகின்றீர்கள்? தாலாட்டுப் பாடுங்களேன்'' என்றார். அப்பா சென்னார் '' நான் தாலாட்டுப்பாடிய படியால்தான் குழந்தை அழவே ஆரம்பித்தது'' .

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# கலவரத்துக்குக் காலாகவிருந்த சிப்பாய் மீது நடவடிக்கை எடுக்கவும்

## பாதுகாப்பு அமைச்சு செயலருக்கு விநாயகமூர்த்தி கடிதம்

(கொழும்பு)

பருத்தித்துறையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களுக்குக்



காரணமாகவிருந்த குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரி யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

விநாயகமூர்த்தி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது,

பருத்தித்துறையில் மீனவர்கள் கடலில் இருந்து காலை 6 .00 மணிக்கு முன் திரும்பிவிடவேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

கடந்த 22ஆம் திகதி இரண்டு மீனவர்கள் 6.00மணிக்குச் சற்று முன்பாகத் திரும்பியிருக்கின்றார்கள்.

அதனால் இராணுவம் அவர்களின் பாஸ்களை இரத்துச் செய்து விட்டது. அன்று மாலை மீனவர்கள் வந்த பொழுது மீனவர்களில் ஒருவரை இராணுவச் சிப்பாய் ஒருவர் தாக்கியுள்ளார். இதன் பின் இராணுவத்தினர் மீனவர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு படகுகளை நாசமாக்கியுள்ளனர். இதன் காரணமாக அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகின்றது. இராணுவத்தினர் ட்றக்குகளில் வந்திறங்கி சாதாரண மக்களையும் சேர்த்துத் தாக்கியிருக்கின்றார்கள்.

இந்தக் கலவரத்திற்குக் காலாக இருந்த இராணுவச் சிப்பாய் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு இராணுவத்தினர் நடந்து கொள்ளக்கூடாது என அறிவுறுத்தபபடுவதுடன்,அப்பகுதியில் இயல்பு நிலையைத் தோற்று விக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடல் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்குப் பாஸ் வழங்கும் நடைமுறையைக் கைவிடும் படியும் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (பி)

# சுமார் 10 ஆயிரத்து 808 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக்கொடுப்பனவு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

போர் காரணமாக இடம்பெயர்ந்து, ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த 10 ஆயிரத்து 808 குடும்பங்களுக்கு இற்றைவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருப்பதாக செயலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட இக்கொடுப்பனவு விபரம் வருமாறு,

வேலணை- 709, ஊர்காவற்றுறை- 648, நல்லூர்- 117, யாழ்ப்பாணம்- 778,சண்டிலிப்பாய்- 496, சங்கானை- 296,உடுவில்- 334,தெல்லிப்பழை- 431,கோப்பாய்- 588,சாவகச்சேரி- 3 ஆயிரத்து 892,கரவெட்டி- 379, பருத்தித்துறை-254, மருதங்கேணி- ஆயிரத்து 416,காரைநகர்- 470,

இதேவேளை, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகப்படியான குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த மாதமளவில் மேலும் ஆயிரத்து 500 பேருக்கு இக் கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (உ-4)

## இராசி பலன்

**25. 10. 2003**
**(ஐப்பசி 08,சனி)**

**அமாவாசை -மு.இ.7.20வரை**
**சித்திரை - பி.ப. 5.53 வரை**
**இராகுகாலம் - 9.02 - 10.32**
**சுபநேரம் - 3.02 - 4.32**
**அமாவாசை விரதம்**
**கேதாரகௌரிவிரதம் முடிவு**

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, புதிய முயற்சி, உறவினர் வருகை, பொருள் சேர்க்கை.

**இடபம்**
உடல் நலம், ரோக நிலை, நல்ல முயற்சி, தொழில் விருத்தி.

**மிதுனம்**
மனச்சோர்வு, சொத்துக்களால் பிணக்கு, காரிய தாமதம், பிரயாணம்.

**கடகம்**
குடும்பநலம்,புதிய விடயம், முயற்சி தாமதம், வாக்கு மேன்மை.

**சிங்கம்**
நல்ல காரியம், செய்தொழில் நன்மை, மனோ தைரியம், கௌரவம்.

**கன்னி**
அதிக செலவு, சங்கடமான நிலை, வீண் வார்த்தை, காரிய தாமதம்.

**துலாம்**
விருந்துபசாரம், கற்பனை மிகுதி, சயன சுகம், முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
சோம்பல், பிரயாணம், நித்திரைக் குறைவு, காரிய தாமதம்.

**தனுசு**
தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, வருமானம் அதிகரிக்கும், போசன நன்மை.

**மகரம்**
அதிகாரம், இஷ்டசித்தி, இடமாற்றம், நல்ல செய்தி.

**கும்பம்**
நிர்ப்பந்திக்கப்படல், சத்துருபீடை, உத்தியோக பங்கம், பிரயாணம்.

**மீனம்**
எடுத்த கருமங்கள் தாமதமாகும், சரீரபீடை, பிறருக்கு உதவுதல், வாகன பயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# துறைமுக ஊழியர் சம்பள உயர்வுபற்றி ஆராய குழு

(கொழும்பு)

துறைமுக ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆராய்ந்து சிபாரிசு செய்ய விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

துறைமுக ஊழியர்களுக்கு 3வருடங்களுக்கு ஒரு முறை சம்பள அதிகரிப்பு வழங்கும் வகையில், அடுத்த வருடம் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. அதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபை, உள்நாட்டுத்துறை முக அலுவல்கள் மட்டு மன்றி,சர்வதேசத் துறைமுகங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகளுடனும் தொடர்புடையதாக இயங்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரதமர், இந்திய மற்றும் இலங்கைத் துறைமுகங்களுக்கிடையிலான தொடர்புகளை மேலும் விரிவுபடுத்த அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-61,8)

# கூட்டறிக்கைக்கு டக்ளஸ் பாராட்டு

(கொழும்பு)

இந்திய-இலங்கைப் பிரதமர்கள் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையின் உள்ளடக்கத்தை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தக் கூட்டு அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த அறிக்கை குறித்த பூரணமான தகவல்கள் இன்னமும் தெரியவரவில்லை. எனினும் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களின்படி, வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகம் என்பது இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வின் ஒரு அங்கமாகவே இருக்க வேண்டும் என்பதும், அரசியல் பன்மைத்துவம், தனிமனித சுதந்திரம் என்பன உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பதும், பயங்கரவாதம் நியாயப்படுத்தப்படக்கூடாது என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் அரசியல் பன்மைத்துவம், ஜனநாயகம், தனி மனித சுதந்திரம் என்பவற்றை மிக முக்கியமாக நாம் வலியுறுத்தி வந்துள்ளளோம்.

இந்த நிலையில் இந்திய இலங்கைப் பிரதமர்களின் கூட்டுஅறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஈ.பி.டி.பி உட்பட மாற்றுக் கருத்துக்கொண்ட அரசியல் சக்திகளின் நிலைப்பாடுகளுக்கும் கருத்துக்களுக்கும்செயற்பாடுகளுக்கும் கிடைத்த ஒரு அங்கீகாரம் ஆகும்.அத்துடன் தமிழ் பேசும் மக்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய ஒரு செய்தியாகும் எனவும் தெரிவித்தார். (உ)

## ஆலயச் சூழலில் குடிநீர்க் கிணறு

(தொல்புரம்)

தொல்புரம்கொட்டடியம்பதி ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினால் ஆலயச் சூழலில் குடிநீர்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குழாய மூலம் குடிநீர் விநியோகம் செய்யப் பட்டுவருகிறது.

இத்திட்டத்தின் மூலம், ஆலயத்தைச் சுற்றியுள்ள அநேகமான குடும்பங்கள் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

## ஏழை மாணவர்களுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருபீடம் தீபாவளித் திருநாளை ஒட்டி, வசதி குறைந்த பாடசாலை மாணவ, மாணவிகள் 100 பேருக்கு இன்று மு.ப. 10.00 மணிக்கு முந்தல் கருங்காலிச் சோலை ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலையில் வைத்து நிதியுதவிகளை வழங்கவுள்ளது.

மேற்படி பகுதி கிராம அலுவலர் இரா.அழகிரிசாமி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு நிதியுதவி வைப்புச் செய்த வங்கிக் கணக்குப் புத்தகத்தை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மாதம் தோறும் இம் மாணவர்களின் வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-18)

## இலவச கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம)

யாழ்.அடைக்கல அனனை திரு இருதய சபை அனுசரணையுடன், யாழ்.அடைக்கல அன்னை ஆலயத தில் இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00மணிமுதல் இடம் பெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர்களால் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், பெறுமதியான கண்ணாடிகள் குறைந்த விலையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# வைத்திய அதிகாரி நியமனத்தில் வடக்கு—கிழக்கு புறக்கணிப்பு

## தமிழீழ சுகாதார சேவை அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

வைத்தியர் பற்றாக்குறை நிலவும் வடக்கு-கிழக்கு வைத்தியசாலைகளுக்கான வைத்திய அதிகாரிகள் நியமனத்தில் புறக்கணிப்புகள் தொடர்வதாக தமிழீழ சுகாதார சேவை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து தமிழீழ சுகாதார சேவை விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கை சுகாதார அமைச்சினால் 06.10.2003ஆம் திகதியிடப்பட்ட அறிவிப்பின்படி 140 புதிய வைத்திய அதிகாரிகளை வெற்றிடங்கள் உள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிக்க ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நியமன விபரத்தில் தமிழ் வைத்தியர்களும் உள்ளனர். ஆனால், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள அனேகமான வைத்தியசாலைகளில வைத்தியர்களுக்கு மிகவும் பற்றாக்குறை இருப்பதை தெரிந்திருந்தும் புதிய வைத்திய நியமனங்கள் வழங்கும் விடயத்தில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வைத்திய அதிகாரிகள் வெற்றிடங்கள் சரியாக குறிப்பிடப்பட்டாது திட்டமிட்டு புறக்கணிப்புச் செய்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வடக்கு-கிழக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 80வீதத்திற்கும் அதிகமாகவும், மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் 65வீதத்திற்கு அதிகமாகவும், வவுனியா மாவட்டத்தில் 40வீதத்திற்கு அதிகமாகவும், வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை இருக்கின்றது.

ஆனால், இப்படியான நிலைமைகளைத் தெரிந்திருந்தும், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஆதார வைத்தியசாலை- கல்முனையில் 01வெற்றிடமும், மாவட்ட வைத்தியசாலை அக்கரைப்பற்றில் 02வெற்றிடமும், ஆதார வைத்தியசாலை-மன்னாரில் 07 வெற்றிடமும், சுற்றியல்கூறு வைத் தியசாலை-புல்மோட்டையில் 01 வெற்றிடமும் உள்ளதாக விளம்பரப்படுத்தியுள்ளது. சுகாதார அமைச்சு.

எனவே, வைத்திய அதிகாரிகள் உண்மையில் இல்லாத தமிழர் பகுதிகளில் வெற்றிடங்கள் இருக்கின்றன என்பதை விளம்பரப்படுத்தப்படாததால் தமிழ் வைத்திய அதிகாரிகள் இங்குவந்து சேவையாற்ற விருப்பம் இருந்தும் விண்ணப்பிக்க முடியாத நிலையை இலங்கை அரசின் சுகாதார அமைச்சு செய்திருக்கின்றது.

சமாதானச் சூழல் நிலவுகின்ற இவ் வேளையில், தமிழ் மக்களுக்கும், புதிதாக உருவாகின்ற வைத்திய அதிகாரிகளுக்கும், இப் பகுதிகளில் நீண்டகாலமாக பெரும் சிரமத்தை அனுபவித்து தொடர்ந்தும் பணியாற்றுகின்ற வைத்தியர்களுக்கும் இது மிகுந்த மன வேதனையையும், ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கின்றது.

இதற்கு முன் நியமனங்கள் வழங்கிய போதும் இதே நிலைதான் இருந்தது. அதையும் தெரியப்படுத்தி இருந்தோம். எனவே, இப்படியான நியமனங்கள் வழங்கும் வேளை மனிதாபிமானமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## பாடசாலை அணிகளுக்கிடையில் கூடைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஹட்டன் நஷனல் வங்கியினால் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்க அனுசரணையுடன் நடத்தப்படும் பாடசாலை அணிகள் மற்றும் கழகங்களின் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று முதல் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று இடம்பெறவுள்ள போட்டி விபரம் வருமாறு:

### பாடசாலை ஆண்கள் அணி

யா/மத்திய கல்லூரி 'ஏ' அணி எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி (காலை 7.00மணி)

வேலணை மத்தியகல்லூரி எதிர் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி (காலை 8.00மணி)

கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி (மாலை 4.00மணி)

யா/மத்திய கல்லூரி 'பி' அணி எதிர் யா/மத்திய கல்லூரி 'சி' அணி (மாலை 5.00மணி)

(உ)

# முதலிடத்திற்கு முன்னேறியது இலங்கை பொலிஸ் கழகம்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் 2003/2004 ஆம் ஆண்டுக்கான பிறிமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற 2போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன.

அன்றைய தினம் சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற றினோன் மற்றும் இராணுவ அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டி, 2:2 என்ற கோல்கணக்கில் வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றிருந்தது. சிறறி லீக் மைதானத்தில் நடைபெற்ற விமானப் படை மற்றும் கடற்படை ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியானது கோல்கள் அற்ற சமநிலையிலும் நிறைவடைந்திருந்தன.

இதன் மூலம் இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 148 போட்டி முடிவுகளின்படி கழகங்கள் நிலையில் பொலிஸ் கழகம் 38 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது.

இதேவேளை, களுத்துறை புளுஸ ரார் கழகத்திற்கும் 38 புள்ளிகள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் கோல்கள் எண்ணிக்கையில் களுத்துறை புளுஸ்ரார் கழகம் 2ம் இடத்திலேயே உள்ளது.

இதேபோல் விமானப்படைக் கழகத்திற்கும், இரட்ணம் கழகத்திற்கும் 36 புள்ளிகள் கிடைத்துள்ளன. எனினும் அதிகபட்ச கோல்கள் கணக்கில் விமானப் படைக்கழகம் மூன்றாம் இடத்திலும், இரட்ணம் கழகம் நான்காம் இடத்திலும் உள்ளன. கடற்படைக்கழகம் 33 புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்தில் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# றகர் போட்டி வரலாற்றில் கனடாவுக்கு புதிய திருப்பம்

5வது உலகக் கிண்ண றகர்ப் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது அவுஸ்திரேலயாவில் நடைபெற்று வருகின்றன. இப் போட்டிகளில் 'டி' பிரிவில் இத்தாலி மற்றும் கனடா ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியில் இத்தாலி அணி 19:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் கனடா அணியை வெற்றி கொண்டுள்ளது.

இப் போட்டியின் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடி இருந்த இத்தாலி அணி ஆட்ட இடை நேரத்தின் போது 9:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் இருந்தது. இடைவேளையின் பின்னர் இத்தாலி அணிக்கெதிராக வழங்கப்பட்ட தணடனை அடி யொன்றை கனடா அணி சாதகமாகப் பயன்படுத்தி புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட போது இத்தாலி அணியின் சவாலுக்கு முகம் கொடுக்க முடியாமல் போனது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா அணியினை 'டி' பிரிவில் வெற்றி கொண்டுள்ளதன் மூலம் இத்தாலி அணி இப்பிரிவின் இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்றிருப்பதுடன், கால் இறுதிப் போட்டிக்குள் நுழையும் வாய்பும் கனடாவுக்கு அதிகரித்துள்ளது.

மேலும் உலகக்கிண்ண றகர் போட்டி வரலாற்றில் ஒரு போட்டிக்கு மேல் கனடா வெற்றிபெற்றிருப்பது இதுவே முதல்தடவையாகும்.(உ-68)




# இளம் சுழல்பந்து வீச்சாளர் பாக். அணியில் இணைப்பு

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் விஜயத்தினை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெற் அணிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணியில் புதிய இளம் சுழல் பந்து வீச்சாளர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். 19 வயதுடைய புதிய இளம் சுழல் பந்து வீச்சாளரான மன்சூர் அஞ்ஸட் மூலமாக சிறந்த பெறுபேற்றினை இப் போட்டியில் எதிர் பார்ப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் பேச்சாளர் ஸமீல் ஹஸன் தெரிவித்துள்ளாா.

கடைசியாக இலங்கையில் நடைபெற்று முடிந்த சுற்றுப் போட்டியில் சிறப்பாக செயல்பட்டதால் மன்சூர் அஞ்ஸட் பாகிஸ்தான் அணிக்கு தெரிவுசெய்யப்பட்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். மேலும் பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் சுழல்பந்து வீச்சாளர்களே அதிகமான விக்கெற்றுக்களைக் கைப்பற்றி இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# ஆஸி.அணியின் வெற்றிக்கு இந்தியக் களம் சதி செய்யுமா?

## ரிக்கி பொண்டிங்கின் அண்மைய கவலை இது

இந்திய மைதானங்களில் தாம் வெற்றிபெற வேண்டுமாயின், மிகப் பெரிய அளவிலான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்குமென நேற்று முன்தினம் மும்முனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெற போட்டிகளில் கலந்துகொள்வதற்காக டில்லி விமான நிலையத்தில் வந்திறங்கிய அவுஸ்திரேலிய அணியின் ஒருநாள கிரிக்கெற் போட்டிகளுக்கான அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார் பொண்டிங்,

இம் மும்முனை ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகள் ரி.வி. எஸ்.மோட்டார் கம்பனியின் ஆதரவுடன் நடைபெறுகின்ற ரி.வி.எஸ். வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டித் தொடராகும். இப் போட்டிகளில் இந்திய, அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகள் கலந்துகொள்கின்றன.

உலக கிரிக்கெற் அணிகளுள் பலம் பொருந்திய அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் மூவர் உடல உபாதைக்கு உள்ளாகியிருப்பதன் காரணமாக இவ் விஜயத்தின்போது அவுஸ்திரேலிய அணியில் இடம் பெற முடியாமல் போனது அவுஸ்திரேலிய அணிக்கு இழப்பாகவே அமையுமெனிலும், இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இது சற்று திருப்பி அளிக்கும் விடயம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிரிக்கெற் ஜம்பவான்களைக் கொண்ட நாடான அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியை இலகுவில் வெற்றி கொள்வது என்பது முடியாத விடயமென்பதை கிரிக்கெற் ரசிகர்கள் எதிர்பார்க்கின்றார்.

(உ-68)

# ஓமான் உடனான போட்டியில் தென்கொரியாவிற்கு ஏமாற்றம்

அடுத்தவருடம் இடம்பெறவுள்ள ஆசிய கிண்ண கால்பந்தாட்டப் போடடிகளுக்கான தகுதிகாண் இரண்டாவது சுற்றுப்போட்டி ஒன்றில தென்கொரிய அணி ஓமானிடம் தோல்வி அடைந்துள்ளது.

கடந்தவருட உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் போது அரையிறுதிப் போட்டிவரை முன்னேறியிருந்த தென்கொரிய அணியானது ஓமானுடனான போட்டியில் 3:1 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்திருப்பது அந்த நாட்டவரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

இதேவேளை இரண்டாம் சுற்றுத் தகுதிகாண் போட்டி ஒன்றில் நேபாள அணியை வியட்நாம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டுள்ளது. மஸ்கெற்றில் நடைபெற்றுவரும் இக் குழுவிற்கான கடைசிப் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன.

(உ-68)

# பாடசாலை மாணவர்களுக்கு பற்சிகிச்சை முகாம்

(சுதுமலை)

அராலி மற்றும் வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பல் மற்றும் முரசு சம்பந்தமான நோய்களுக்கு நடமாடும் பற்சிகிச்சை முகாம் மூலம் சிகிச்சை வழங்கப் படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக 3பற்சிகிச்சை அதிகாரிகளால் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 31ஆம்திகதி வரையான 5 நாட்கள் இப் பற்சிகிச்சை முகாம் நடாத்தப்படவுள்ளது.

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர பல் வைத்தியர் இன்மையாலேயே கடந்த 2 வருடகாலமாக பல மாணவர்கள் பற்சிகிச்சை பெறமுடியாமல் இருந்து வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (உ-252)

# 7ஆம்கட்ட சமாதானப் பேச்சு அடுத்த ஆண்டுத்தொடக்கத்தில்

## அதற்கு முன்பாக முன்னோடிச் சந்திப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டியிருப்பதால், அடுத்த வருட முற்பகுதியிலேயே இடை நிறுத்தப்பட்ட சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியம் இருப்பதாக எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் திட்ட வரைபு குறித்த புலிகளின் மாற்று யோசனை இம் மாதம் 31ஆம்திகதி நோர்வேயூடாக கையளிக்கப்படவுள்ள நிலையில், பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் இடம், நிகழ்ச்சி நிரல், திகதி என்பவற்றை முடிவு செய்வதற்கான முன்னோடி சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வதை நோக்கமாகக்கொண்டு நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்ஷோல் ஹெய்ம் அடுத்த மாத நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளார் என்பதை நோர்வே தூதரகம் உறுதி செய்துள்ளது.

இதேவேளை, தாம் மீண்டும் பேச்சுக்களில் இணைந்து கொள்ள தயராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இவ்வார முற்பகுதியில் அறிவித்துள்ளனர்.

இது வரைகாலமும் நடைபெற்ற 6கட்டப் பேச்சுக்களின் போது அரசு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றவில்லை எனக் குற்றம் சாட்டி விடுதலைப்புலிகள் கடந்த ஏப்ரலில் பேச்சுக்களில் இருந்து விலகியிருந்தனர்.

இது இவ்விதமிருக்க விடுதலைப் புலிகளின் மாற்று யோசனைகள் கிடைத்தும் நேரடிப்பேச்சுக்களை ஆரம்பிக்ககூடிய திடீர் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் நோர்வேத்தரப்பிடம் அவசர வேண்டுகோளை விடுத்திருப்பதாக அமைச்சரவைப்பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் நேற்று முன்தினம் தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-6)

# பிரதமர் ரணிலின் ஐ. நா. உரையை எதிர்க்கட்சிகள் தவறாக புரிந்துள்ளன

## அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரசிங்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஆற்றிய உரையை எதிர்க்கட்சியினர் தவறாகப் புரிந்துகொண்டே வாத, விவாதங்களை நடந்துகின்றனர். என வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமரின் ஐ.நா. உரையைக் கண்டித்து கொண்டுவரப்பட்ட சபை ஒத்தி வைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ஈராக் நாட்டுக்காக கண்ணீர் விடும் மக்கள் விடுதலை முன்னணியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் இந்த நாட்டில் வாழும் சிறுபாண்மை இனமான தமிழ் மக்களுக்காக எதனையும செய்யவில்லை.

சறுபாணமை இனமக்களின் ஆசைகளை பூர்த்தி செய்யாத இவ்விரு கட்சிகளும் ஈராக்கிற்கு பரிந்துரை கூறி, கண்ணீர் விடுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

பிரதமர் தனது உரையில் ஈராக் பற்றியன்றிஅங்கு நடைபெறும் மீள் கட்டமைப்புப்பணிகள் குறித்தே உரையாற்றினார். இதனை தவறான அர்த்தத்தில் புரிந்து கொண்டு எதிர்க் கட்சியினர் வாத, வவாதங்களை நடத்துவது நகைப்புக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குமாறு ஜனாதிபதி மீண்டும் அறிவுறுத்து

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பள உயர்வினை அடுத்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மூலம பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அமைச்சரவைக்கு மீண்டும் ஒரு முறை அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப பத்திரம் ஒன்றையும் ஜனாதிபதி அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 18ஆமதிகதி ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்த அமைச்சரவைப் பத்திரத்தில் அரச ஊழியர்களின் சம்பளம உடனடியாக 50 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என கேட்டிருந்தார்.

இதற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் 18ஆம்திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நகல் அறிக்கையில், இவ்வாறான சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு முன்னர் சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசுகளை ஆழமாக ஆராய வேண்டும என நிதியமைச்சு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (தி-61.3)

# இருளுக்குப்பின் நிரந்தர சமாதானம் மலரப்போவதாக பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

இருளுக்குப்பின் ஒளி வருவதைப் போன்று யுத்தத்திற்குப்பின் சமாதானம் மலரப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்து காலாசர அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட தேசிய தீபாவளி தருநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டுபேசுகையில் அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், தற்போது நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்தத்தை முழுமையான சமாதானமாக மாற்றிக்கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யுத்தம் காரணமாக நாடு முழுவதும் சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களே அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்றார்.

இவ் வைபவத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் நாட்டில் அமைதி நிலவி வந்தபோதிலும் மக்கள் மனங்களில் நிறைவு இல்லை. இதனை ஐக்கியதேசிய முன்னணி அரசு நிறைவேற்றவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் வர்த்தக பிரதிநிதிகள் சமயத்தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (தி)





வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடாத்திய இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் விழாவிலே இளைபபாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும், பருத்தித்துறை பிரதேச சபை பிரதம நூலகர் எஸ்.திருச்செல்வம் கண்பார்வைகுறைந்த ஒருவருக்கு இலவச மூக்குக்கண்ணாடியை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

# ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் வழமை நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டன

## உள்துறை அமைச்சர் கவலை

(கொழும்பு)

கிண்ணியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு காரணமாகவிருந்த நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக உள் விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில் இவர்கள் அனைவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமாதானத்தைக்குழப்பும் அரசுக்கு எதிரான சக்திகளே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவர்களின் எண்ணங்கள் ஈடேறாத வகையில் மக்கள் அனைவரும் ஐ.தே.மு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அண்மைக்காலங்காளாக இவ்வாறான சக்திகளின் ஆதிக்கம் தலை தூக்கப்படுவதும் பின்னர் அவை கட்டுப்படுத்தப்படுவதும் வழமையான நிகழ்வுகளில் ஒன்றாகி வருகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன திங்களன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன எதிர்வரும் 27ஆம்திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் விஜயம்செய்யவுள்ளார்.

கைத்தொழில் அபிவிருத்தி, கைத்தொழில்க்கொள்ளை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இனவிவகாரங்களுககான அமைச்சர் ஜீஎல் பீரிஸின் கொள்கை வகுப்பிற்கிணங்க யாழ். மாவட்ட தொழில் முயற்சியாளர் களுக்காக "சகஞ்ஜா" என்னும இலகு கடன் திட்டம் வர்த்தக வங்கியூடாக அமுல்ப் படுத்தப்படவுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு திங்களன்று மு.ப. 10 மணியளவில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாண காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பங்கேற்கும் முகமாகவே கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் கலாநிதி பந்துல பெரேரா சகிதம் அமைச்சர் ஜயலத் யாழ். வரவுள்ளா. (உ)

# கட்டுடைப்பகுதியில் டெங்கு விழிப்புக் கருத்தரங்கு

(சுதுமலை)

வலி. தென்மேற்குப்பிரதேச சபையின் கீழ் உள்ள கட்டுடைப் பகுதியில் மலேரியா தடைஇயக்கப் பரிவினரால் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும், சிரமதான நிகழ்வுகளும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் தொற்று நோய்கள் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையில் சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாகவும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டுடைப்பகுதியில் அணமையில் ஒருவர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதையடுத்தே இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-252)



யாழ்ப்பாணம் வீதிகள் அபிவிருத்தி திணைக்கள நிறைவேற்று பொறியியலாளர் திருமதி புனிதவதி, கூல் வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டதை அடுத்து உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்ட பிரியாவிடை விழாவின் போது எடுக்கப்பட்ட படம். (படங்கள்: பரு. நிருபர்)

*கானாதான் காட்டுவான் தான்*
*காணான் கானாதான்*
*கண்டானாம் தான்கண்டவாறு.*
*—குறள்*

வலம்புரி

## ஜனாதிபதி அனுப்பிய கடிதம்

கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலிவ்சனின் நடவடிக்கைகள் இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதால் அவரை உடனடியாக பதவி விலக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேப் பிரதமருக்கு அனுப்பி வைத்த அவசர கடிதமொன்றில் கேட்டுள்ளாா.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றைக்கடற்படையினர் சுற்றி வளைக்க இருந்த சமயம் அது பற்றிய தகவலை கண்காணிப்புக்குழு, விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்தியதால் ஆயுதக் கப்பல் தபபிச் சென்று விட்டதாக கடற்படைத் தளபதி தயாசந்தகிரி ஜனாதிபதிக்குத் தெரிவிதத முறைப்பாட்டை அடுத்தே கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சனைப் பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

கடற்படைத் தளபதி ஜனாதிபதியிடம் தெரிவித்த முறைப்பாடு குறித்து சரியானதோர் விசாரணை - விளக்கம் என்பதனை மேற்கொள்ளாமல், எழுந்தமானமாக கணகாணிப்புக் குழுத் தலைவரைப் பதவி நீக்குமாறு ஒருநாட்டின் தலைவி கேட்பது, சமாதான முயற்சியில் அவர் கொண்ட விருப்பக் குறைவையே காட்டி நிற்கிறது.

விடுதலைப் புலிகளுக்கு வநததாகக் கூறப்படும் ஆயுதக் கப்பல் எங்கிருந்து வந்தது, அந்தக் கப்பல் வந்த தகவல்களைத் தெரியப்படுத்தியது யார் என்பது போன்ற விசாரணைகளை மேற்கொண்டு புலிகளுக்கு ஆயுதக் கப்பல் வந்தமை உண்மைதானா என்பதனை உறுதிப்படுத்தாமல், ஆயுதக்கப்பல் வந்தது உண்மை என்றும், அக்கப்பல் கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட இருந்த தகவலைக் கண்காணிப்புக் குழுத் தலைவரே புலிகளுக்குத் தெரியப்படுத்தினார் என முடிவு செய்வதும் எவ்வகையிலும் பொருத்துடையதல்ல.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் வேளையில் சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வே அரசை வெளியேற்றுவதன் மூலமே சமாதான முயற்சியைக் குழப்ப முடியுமென்ற தீர்மானத்தோடு ஜனாதிபதி நோர்வேப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் என்பது தெட்டத்தெளிவாகிறது.

சமாதான முயற்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நடததிவரும் பொது ஜன ஐக்கிய முன்னணி இப்போது நோர்வேயின் கண்காணிப்புக் குழுவைச் சீண்டுவதன் மூலம் சமாதான முயற்சியைக் குழப்பத் திட்டந் தீட்டியுள்ளது. அதன் முதற் படியாக நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி அனுப்பிய கடிதம் அமைந்துள்ளது.

# அடியார்கள் வேண்டுவதை அடைந்திட அருளும் கேதார கௌரி விரதம்

வேண்டுவோர் வேண்டுவதைத் தரவல்ல விரதங்களுள் தலைசிறந்த சிவ விரதம் கேதார கௌரி விரதம் ஆகும். ஒவ்வொரு விரதமும் தோன்ற ஒவ்வொரு காரணம் உண்டு. அந்த வகையில் இக் கேதாரகௌரி விரதம் தோன்றிய வரலாறு பற்றி ஒரு கதை உண்டு.

அருள் கடாட்சத்தை அள்ளி வழங்கும் அன்னை உமை தனது நாயகன் பரமேஸ்வரனுடன் ஸ்ரீகைலாயத்தில் வீற்றிருந்தார். அப்போது பிரம்மா, விஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி, சிருஷ்டி ஸ்திதி சம்காரம் போன்றவற்றைப் பற்றி விவாதம் நடத்திக்கொண்டிருந்தனர். அத்தோடு நந்தி, பிருங்கி போன்ற ரிஷிகணங்கள் தாள வாத்தியங்களை வாசித்துக் கொண்டும், சரஸ்வதி தேவி வீணை வாசித்துக் கொண்டும் இருக்க சிவசபை மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

எல்லாம் இனிதாக நிறைவுற்றதும் பிருங்கி முனிவர் பார்வதி தேவியை விட்டு விட்டு ஈஷ்வரனை மட்டும் நமஸ்கரித்துவிட்டு பார்வதியைக் கண்டும் காணாதவாறு புறக்கணித்துச் சென்றார்.

இதைக் கண்ணுற்ற பார்வதி தேவி முனிவர் மீது மகா கோபம் கொண்டு அவரது சக்தியாற்றலைப் பறித்துக் கொண்டார். உடனே சிவன் ரிஷிக்கு சக்தியளிக்க ஒரு தண்டத்தைக் கொடுத்தார்.

தன்னை அவமதிக்கவே சிவன் இவ்வாறு செய்தார் எனக் கொதிப்படைந்த பார்வதி சிவனுடள் இருக்கபபிடிக்காமல் பூலோகம் வந்தடைந்



தார்.

பார்வதி பூலோகம் வந்ததும் அங்கு பல மாற்றங்கள் நிகழ்ந்தன. மழையின்றி வரண்டிருந்த செடி கொடிகள் பூத்துக் குலுங்கி வசந்தம் வீசியது.

இம் மாற்றங்களைக் கண்ணுற்ற வால்மிகி முனிவர் அவ்வழியே தொடர்ந்து சென்று வில்வமரத்தின் கீழ் தனித்திருந்த நாயகியைக் கண்டார்.

அம்பிகையைப் போற்றித்துதித்து உமையே! ஈஸ்வரனின் துணையின்றித் தனியாகத் தாங்கள் மட்டும் அமர்ந்திருக்கக் காரணம் யாது? என வினவினார்.

தேவி நடந்தவற்றைக் கூறி இறைவனுடன் தான் மீண்டும் சேர வழியுண்டா என வினவினார். அவரும் ‘அம்மையே இதுவரை எவரும் அனுட்டிக்காத விரதம் ஒன்று உண்டு அதனை அனுட்டித்தால் 21வது நாளான இறுதிநாள் தீபாவளி அமாவாசை தினத்தன்று பரமன் உங்கள் முன் தோன்றி வரமருள்வார்’ என்றார்.

ரிஷி சொன்னதன்படி பார்வதியும் புரட்டாதி மாதம் சுக்கிலபட்சத்தசமி தொடங்கி ஐப்பசி மாதம கிருஷ்ணபட்சம் தீபாவளி அமாவாசை வரைக்கும் 21 தினங்கள் விரதமிருந்தார். ஒவ்வொரு நாளும் நீராடி சுத்தமான ஆடை அணிந்து ஆல மரத்தின் கீழ் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து அதற்கு அபிஷேகம் செய்தார். விபூதி, மஞ்சள், அதிரசம் வாழைப்பழம், தேங்காய், பாக்கு, வெற்றிலை போன்றவற்றை வைத்து வில்வ, குங்கும அர்ச்சனை, தூப தீபம், நைவேத்தியம் செய்து வணங்கினார்.

21 இழையில் ஒரு நூல் முறுக்கி அதைத் தினமும் ஒரு முடியாக 21 நாள முடிந்து உபவாசம் இருந்தார். 21 நாளும் கிரமமாக விரதமிருந்தார். இவ் விரதமே கேதார கௌரி விரதமாகும்.

அம்பிகையின் விரதத்தால்மன மகிழ்ந்த பரமன் தேவகணங்கள் புடைசூழ காட்சியளித்து தனது இடப்

**சி.யாழினி**

பாகத்தை அம்பாளுக்கு அளித்து அர்த்தநாரீஸ்வராக கைலாயம் சென்றார்.

இத்தகைய அர்த்தமும் மேன்மையும் கொண்ட இவ் விரதத்தை மனம் விரும்பிஅனுட்டிப்பவர்களுக்கு இறைவன் சகல செல்வங்களையும் வழங்குவார்.

நினைத்ததை நிறைவேற்றி நல்வாழ்வு வாழ அனைவரும் இவ்விரதத்தை அனுட்டித்து இறையருளைப பெறுவோமாக! □

# முயற்சியால் உயர்ச்சி பெற்ற வங்கியாளர் விஜயகாந்தன்

இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்புரிமை... என்றார் இந்தியாவின் பிரதமராக இருந்த நேரு அவர்கள். இப் பூவுலகில் பிறந்தவை எல்லாம் மறைவது உலக நியதி என்பத



னால் **நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும் பெருமையுடைத்து இவ்வுலகு** என்ற முடிவை வள்ளுவப் பெருந்தகை எடுத்துக் கொண்டார்.

நேற்றிருந்தவர் இன்றில்லை என்பதுதான் இந்த உலகத்திற்கு இருக்கக்கூடிய பெருமையாக இருப்பினும், சிலரின் மறைவு மனித மனங்களில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

அதில் வங்கியாளர் மார்க்கண்டு விஜயகாந்தனின் மறைவும் ஒன்றாகிவிட்டது.

ஆம்... சமூக விழுமியங்களின் தார்ப்பரியத்தை உணர்ந்து சமூக உணர்வைப் பலப்படுத்தி, எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகிய பபா என்று அன்பாக அழைக்கப்பட்ட விஜயகாந்தன் அவர்கள் இன்று நம்மத்தியில் இல்லை.

ஆனால் அவரோடு பழகிய, உறவாடிய, நிஜங்கள் அவரின் பிரிவை எண்ணும் போதெல்லாம்

**மறைந்தார் மாண்பு**

எம் மனங்களில் சப்திக்கவே செய்கின்றன.

மனித உலகம் நாகரிகமென்ற போர்வையில் மனிதத்தை மறந்து போகின்ற காலத்தில், அதில் எதிர் நீச்சல் போட்டு, எப்போதும் ஒரே மாதிரியாக, எளிமையாக, ஆடம்பரம் இன்றி மற்றவர்களையும் மதித்து வாழவேண்டும் என்ற கொள்கையோடு வாழ்ந்தவர் வங்கியாளர் விஜயகாந்தன் அவர்கள்.

பிறரை மதிக்கும் பண்பும், மற்வர்களோடு அன்பாகப் பழகும் இயல்பும், அவருக்கு நல்ல நட்புகளையும், மதிப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

முயற்சியே ஒரு மனிதனின் வாழ்வில் உயர்வைத் தரும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட விஜயகாந்தன் காலத்தின் அசைவுகள் ஒவ்வொன்றையும் வீணாகக் கழித்ததே இல்லை.

‘‘காலம் என்பது தெய்வத்தால் இசைக்கப்படுகின்ற ராகம்’’ என்ற கவியரசு கண்ணதாசனின் வார்த்தைக்கு உயிர்ப்புக் கொடுத்தவர்களில் அவரும் ஒருவர்.

வேலணையில் சிறந்த விவசாயக குடும்பத்தில் பிறந்த விஜயகாந்தன் தீவகத்தின் கலா பீடமாகத் துலங்கும் வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி மத்தியமகா வித்தியாலயத்தில் கல்விகற்று, வங்கித் தொழிலில் இணைந்து, இலங்கை வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக் கிளையில் பணியாற்றினார்.

**ந-விஜயன்**

தனது முயற்சியால் வங்கித் தொழிலில் உயர்வு பெற்ற அவர், சக வங்கியாளர்களுடன் அகநக நட்புக் கொண்டதால், வங்கியில் எல்லோராலும் காந்தன் என்று அன்புரிமையோடு அழைக்கப்பட்டார்.

அவரின் மறைவு, பேரிழப்பு, நல்லதொரு முயற்சியாளனை நாம் இழநதுவிட்டோம் என்ற துயரத்தோடு, அவரின் உயரிய பண்புகளை நெஞ்சத்தின் துடிப்புகள் நித்தமும் நினைவூட்டுகின்றன.□

### திஙசரி தியானம்

## தோல்வி

தோல்வி வெற்றிக்கான படிக்கல்லாகும். ஆரம்பகாலத் தோல்விகளுக்காக மனம் விட்டுவிடக் காரணமே இல்லை. நல்லவைகளை அடைவது வாழ்க்கையில் எப்போதும் கஷ்டமானது என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதனால்தான் தைரியமும் விடாமுயற்சியும் ஆன்மீகத்தை நாடுபவர்க்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. ஒவ்வொரு தோல்வியும் உங்களுக்குப் பாடம் புகட்டுகிறது. இதனைச் சரியாக ஆராயந்து பார்த்து உணர்ந்து பயன்பெற வேண்டும். இப்படியாகத் தோல்விகள் உங்களது வெற்றிக்குப் படிக்கற்களாகும்.

சுவாமி சிவானந்தர்

# இந்தியாவின் நிலைப்பாட்டை தமிழ்ச்செல்வன் வரவேற்பு

(கிளிநொச்சி)

இலங்கையின இனப்பிரச்சினைககான இறுதித் தீர்வுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தியே இடைக்கால நிர்வாக சபைக்கான இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை வரவேற்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன கடந்த புதன்று இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே சு.ப.தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக விடுதலைப புலிகளினால் தயாரிக்கப்பட்டுள்ள யோசனைகள் இம்மாதம் 31ஆம் திகதி நோர்வே அரசு ஊடாக இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ம)

## தையல் பயிற்சி ஜனவரி ஆரம்பம்


கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் பிரதேச செயலகங்களில் நடாத்தப்படும தையல் பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்தித் திணைககளத்தின் பணிப்பாளர் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

அத்துடன், மேற்படி பயிற்சி வகுபபில் இணைந்துகொள்ள விரும்புவோர் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும் எனவும் அவர்களில் தகுதியுடைய பயிலுநர்களை தெரிவு செயவதற்காக டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குள் நேர்முகப் பரீட்சைகளை நடாத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (உ-36)

யாழ்ப்பாணம்.

# ஏழை மக்களுக்கு உதவி செய்ய இந்து ஆலயங்கள் முன்வரவேண்டும்

## தேசிய தீபாவளித் தினத்தில் அமைச்சர் மகேஸ்வரன் அறைகூவல்



(யாழ்ப்பாணம்)

இந்து மத நிறுவனங்களும், அமைப்புக்களும் தமது சமயம் சார்ந்த மக்களின் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளாமையே, மத மாற்றம் இடம் பெறுவதற்கு முக்கிய காரணமாகவுள்ளது.

இவ்வாறு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் சுட்டிக் காட்டினார்.

நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் தேசியத் தீபாவளி பெரு விழா வெகு விமரிசையாக இடம் பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

யாழ் குடாநாட்டில் வாழுகின்ற மக்களில் அதிகமானவர்கள் இந்துக்கள். ஆனால் ஏனைய மத பீடங்களும் தம் மதத்தவர்களின் துன்ப துயரங்களில் பங்கு கொள்வது போன்று இந்து மத அமைப்புக்கள் கலந்து கொள்ளாத நிலைமை வேதனை தருவதாக இருக்கிறது.

இந் நிலைமை மாற வேண்டும். ஏழை மக்கள், துன்பப்படுவோர், வயோதிபர்கள், நோயாளிகள், மற்றும் மாணவர்களுக்கு உதவுவதில் இந்து நிறுவனங்கள் அதிக கரிசனை கொண்டு சேவையாற்ற வேண்டும்.

இந்து ஆலயங்கள் சமூகப் பணியைச் செய்ய மறந்து அப்பணியை செய்ய முன்வராத நிலைமையே இன்று மத மாற்றம் ஏற்படக் காரணம்.

இங்கு மத மாற்றம் பற்றி அலட்டிக் கொள்வதிலும் பார்க்க அவை ஏன் இடம் பெறுகின்றன என ஆராய்வதே பொருத்தமானதாகும். அதற்குரிய காரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதற்கு ஏற்ற வகையில் இந்து சமய நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன் சமூக சேவையில் ஈடுபட வேண்டும். அப்போது அனைத்து சிக்கல்களும் சுமுகமாகும். என்றும் அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## விபத்துச் சம்பவம் குறித்து படைத்தரப்பு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் 17ம் திகதி பி.ப. 4.15 மணியளவில் ஒரு இராணுவ வாகனம் (ட்ரக்) குப்பிளான் சந்தியில் நிறுத்தப்பட்டிருநதது. அச்சமயம் பொதுமகன் ஒருவா டபிள்யூ.பி.ஜி. எஸ். 4376 என்ற பதிவு செய்யப்பட்ட இலக்கம் கொண்ட ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிளில் வந்து யாழ்ப்பாணம்-பலாலி வீதியைக் கடக்க முயன்றார்.

அதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருநத பொது வாகனம் ஒன்றைத் தவிர்க்க முயன்று சறுக்கி விழுந்து, தரித்து நின்ற இராணுவ வாகனத்தின் முன்வந்து நின்றார்.

ஊரெழு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வாகனம் செலுத்தியவரின் வாக்குமூலத்தை எடுத்துள்ளார். தனது தவறை ஏற்றுக் கொண்டதன் பின்னர், வாகனஓட்டி அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளார்.

மோட்டார் சைக்கிளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய எந்தவித சேதமும் வாகன ஓட்டி கட்டுப்பாட்டை இழந்தமையாலும் விழுந்ததினாலும் ஏற்பட்டதேயன்றி வாகனத்துடன் மோதியதனால்ல என்பதை மீள வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. ' (பி)

## புத்திரசிகாமணிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை பொ.ஐ.முன்னணி தயார்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் வி.புத்திரசிகாமணிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொண்டு அவரைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெரட்ணா தெரிவித்துள்ளார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி நேற்று நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கண்டித்து பாராளுமன்ற உறுப்பினர் வி.புத்திரசிகாமணி நேற்று முன்தினம் பொது ஜன ஐக்கிய முன்னணிக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனத்தில் இருந்து எழுந்து தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினக்குரிய ஆசனத்தில் அமர்ந்த சம்பவம் தொடர்பாகவே இந்த நடவடிக்கை எடுக்கப் போவதாக அவர் கூறினார்.

இதேவேளை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைக்காகக் குரல் கொடுப்பதே தமிழ் மக்களின் பிரதிநிதியான தனது முதல் கடமையென பாராளுமன்ற உறுப்பினர் வி.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக தனது பதவி பறிபோனாலும் அது குறித்து கவலை அடையப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் கட்சி தனக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளுமானால் அதற்கு முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் புத்திரசிகாமணி குறிப்பிட்டதோடு பாராளுமன்ற அந்தஸ்து பறிக்கப்படுமானால் அதனை மீண்டும் பெற்றுக் கொடுக்க இலங்கையில் வாழும் அனைத்து இந்து மக்களும் தன்னுடன் இருப்பார்கள் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (இ-5)

## அமெரிக்க நாட்டு அரசுக்கு...

எனினும் இச் செய்தியில் எந்த விதமான உண்மையும் இல்லையென எரிக்சோல் ஹெய்ம் நேற்றுத் தெரிவித்திருந்தார்.

இப் பத்திரிகைச் செய்தி தொடர்பாக நோர்வேயின் விஷேட தூதுவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஒரு நாட்டின் உள்விவகாரங்களிலோ, அல்லது அது குறித்து ஆலோசனைகளை வழங்குவதிலோ நோர்வே அரசு ஈடுபட மாட்டாது. இந் நிலையில் விடுதலைப் புலிகளை அமெரிக்கா தனது பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து நீக்க வேண்டுமென நோர்வே அமெரிக்காவுக்கு பரிந்துரை செய்யுமென எதிர்பார்க்க முடியாது.

நோர்வே அரசைப் பொறுத்தளவில் சமாதான முயற்சிகளில் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே அனுசரணையாளராக மட்டுமே இருக்க முடியும். அந் நாட்டின் உள்விவகாரங்களில் நோர்வே அரசு ஒரு போதும் தலையிட மாட்டாது என்றும் தெரிவித்தார்.(ம)

## குன்னக்குடியின் வயலின்...

தீபாவளி நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், அலை அலையாக கூடிய மக்கள் கூட்டம் ஆலய முன்றலில் அலை மோதியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நிகழ்வின் சிறப்பம்சமாக தபால்தலை வெளியிடப்பட்டதுடன், 'சிவன் ஒளி' என்னும் மாத இதழ் ஒன்றும் வெளியிடப்பட்டது.

மற்றும் இந்து கலாசார அமைச்சின் அதிகாரிகள் இந்துக் குருமார் எனப் பலர் மேடையை அலங்கரித்திருந்தனர்.

-விஷேட நிகழ்வாக புகழ் பூத்த இசைமா மேதை டாக்டர் குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினரின் வயலின் இசை நிகழ்வும் இடம் பெற்றது. (இ-112)

### விபத்தில் படுகாயம்

(நெல்லியடி)

சுவிஸ்லாந்து நாட்டில் இருந்து விடுமுறையைக் கழிக்க ஊர் திரும்பியவர் விபத்தில் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கோப்பாய் பூதர்மடம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மினிபஸ் விபத்திலேயே மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சுவிஸ் நாட்டில் இருந்து ஊர் திரும்பியவரான நாகர் கோவிலடியைச் சேர்ந்த ந.சிவகுமார் (வயது 35) அவருடன் கூட வந்த வடிவேல் (வயது 22) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். (உ 44)

## மூவர் பலி

(கொழும்பு)

பொலநறுவை அருளங்கவிலப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றிக் தெரிய வருவதாவது, வீட்டுத் தோட்டத்தில் கிடந்த குண்டை எடுத்து வந்த தந்தையார் அதனை பரிசோதனை செய்ய முற்பட்டபோது அது வெடித்துச் சிதறியதில் அவர் உட்பட மகள், தாய், ஆகிய மூவரும் பலியாகியுள்ளனர். (தி-61)

### உலகில் இசையை...

இருவரையும் வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வொன்று நிறுவனத்தின் கேட்போர கூடத்தில், கருத்துரை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலநது கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- யாழ்ப்பாணம் என்பது யாழ். என்ற இசையின் பெயரைக் கொண்டமைந்திருப்பது, இம்மக்களின் இசை இரசனைக்கு பெருமை தரும் விடயமாகும் எனக் குறிப்பிட்டதுடன், யாழ்ப்பாணத்தில் உண்மையை ஒலிக்கச் செய்யும் வலம்புரி-சங்குநாதம் பத்திரிகை அதன் பெயரில் உலகை வலம்வரும் நாதமென ஒலிப்பது அதன் சேவைக்கு மகுடம் சேர்ப்பதாக உள்ளதெனவும் குறிப்பிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்வில் பேரூர் ஆதீன இளவரசர் மருதாச்சலம் அடிகளும் தமது அருளுரையில், இலங்கைத் தீவில் அமைதி, சமாதானம் ஏற்படவேண்டுமென அருளாசி வழங்கினார்.

அடிகளாரையும், இசைமாமேதையையும் கௌரவிக்கும வகையில் வலம்புரி-சங்குநாதம் பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் எஸ்.வெற்றிவேலாயுதம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

ஆசிரிய பீட ஆலோசகர் க.திருமாலழகன் மலர் மாலை அணிவித்தார். நிகழ்வில் சுங்கத்திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் கே.கே.சுப்பிரமணியம், ஆசிரியபீடத்தைச் சேர்ந்த கவிஞர் துரைசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (இ)

### அரசுக்கு எதிராக...

மான மக்கள் எதிர்ப்புப் பேரணி கொழும்பு மாநகரசபை மைதானத்தை வந்தடைந்தது.

பேரணியின் முடிவில் பொதுக் கூட்டமொன்றும் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

## இலங்கையின் கராத்தே தந்தை சீகான் பொனி றொபேட்ஸை தலைவர் பிரபா கௌரவித்தார்

(கிளிநொச்சி)

இலங்கையின் கராத்தே தந்தையும் எட்டாவது கறுப்புப்பட்டி பெற்றவருமான கிரான்ட் மாஸ்டர் சீகான் பொனி றொபேட்ஸ் (Grand Master Shihan Bonnie Roberts) கராத்தே கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையையும், பங்களிப்பையும் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் புலி இலச்சினை பொறிக்கப்பட்ட தேசிய விருதினையும், நினைவுப் பரிசினையும், வழங்கிக் கௌரவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ கராத்தே சங்கத் தலைவர் ரட்ணசோதி மாஸ்டர், தமிழீழ விளையாட்டுத் துறை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ம. பத்மநாதன், தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

74 வயது நிரம்பிய கிராண்ட் மாஸ்டர் பொனி றொபேட்ஸ், மட்டக்களப்பு கல்முனையைப் பிறப்பிடமாக கொண்டவர். சர்வதேச கராத்தே போட்டிகளில் முதன் முதலில் கலந்து கொண்ட தமிழ் மகன் என்ற பெருமைக்குரியவர். யாழ் மண்ணில் கராத்தே கலையை அறிமுகப்படுத்தியவரும் இவரே. பொனி றெபோட்ஸ் அவர்கள் சர்வதேச சோட்டோகான் கராத்தே சங்கத்தின் ஜப்பானால் அங்கீகரிக்கப்பட்ட ஏகப் பிரதிநிதியாக இலங்கையில் இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வின் இறுதியில் கிரான்ட் மாஸ்டர் பொனி றொபேட்ஸ் தமிழீழத்தில் கராத்தே கலையின் வளர்ச்சிக்கும் அ[illegible] மேம்பாட்டிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிவரும் சேவையை பாராட்டி கௌரவ விருதாக ஆறாவது கறுப்புப் பட்டியையும் அதற்கான சான்றிதழையும் தமிழீழ தேசியத் தலைவருக்கு வழங்கி கௌரவித்தார். (உ-5)

## கோப்பாய் காசநோய்ப் பிரிவை சங்கானைக்கு மாற்றும் முயற்சி மக்கள் எதிர்ப்பால் கைகூடவில்லை

(சங்கானை)

கோப்பாயிலுள்ள காசநோயாளர் பிரிவை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றும் நடவடிக்கைளுக்கு சங்கானைப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதனன்று, கோப்பாயில் இயங்கி வந்த பிரிவை சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றுவதற்காக அங்கிருந்த நோயாளர்கள் வாகனங்களில் சங்கானைக்கு ஏற்றிச்செல்லப்பட்டனர்.

இதையறிந்த சங்கானைப் பகுதி மக்கள், தமது பகுதியில் காசநோய்ப் பிரிவை அமைக்க வேண்டாமெனவும் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் இப்பிரிவை மாற்றுவதற்குத் தாம் அனுமதிக்கமாட்டோம் என[illegible] எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுப[illegible]னர்.

இதனையடுத்து காசநோயாளர்களை ஏற்றிவந்த வாகனம் மீண்டும் நோயாளர்களுடன் கோப்பாய்க்குத் திரும்பிச் சென்றதாகத் தெரியவருகின்றது. (உ-34)

## 20 இலட்சம் சீமெந்துப் பைகள் இற்றைவரை எடுத்துவரப்பட்டன

(வடலியடைப்பு)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டிற்கு 20 இலட்சத்திற்கும் அதிகமான சீமெந்துப் பைக்கற்றுகள் எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால், யாழ். குடாநாட்டில், கட்டடங்கள் பலவும் பெரும் சேதங்களுக்குள்ளாகியிருந்தன.

கடந்த வருடம் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து குடாநாட்டில் பரவலாக புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காகவே யாழ். குடாநாட்டிற்கு இவ்வளவு பெருந்தொகையான சீமெந்துப் பைக்கற்றுக்கள் எடுத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-21)

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
+ 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
+ X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பததிரி வீதி, யாழப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.